பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை
20 10 2024 6 45
ஞாயிற்றுக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் முன்னேற்றத்திற்கான உந்துசக்தியாக மனிதவளத்தை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் கர்மயோகி இயக்கம் செயல்படுத்தப்பட்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. கடந்த 10 ஆண்டுகளில் நாடு அடைந்துள்ள முன்னேற்றம் உலக நாடுகளை உற்றுநோக்கச் செய்துள்ளதாக தமிழக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி தெரிவித்துள்ளார்.

3. அரசின் திட்டங்கள் அனைத்தும் மக்களைச் சென்றடையும் வகையில் அதிகாரிகள் பணியாற்ற வேண்டும் என்று துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

4. வட தமிழக பகுதிகளில் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக தமிழகத்தின் பெரும்பாலான இடங்களில் அடுத்த 6 நாட்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. மலேசியாவில் நடைபெறும் ஜோஹர் கோப்பை ஜூனியர் ஹாக்கிப் போட்டியில் இன்று இந்தியா - இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்---

<<<<>>>>

நாட்டின் முன்னேற்றத்திற்கான உந்துசக்தியாக மனிதவளத்தை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் கர்மயோகி இயக்கம் செயல்படுத்தப்பட்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் உள்ள டாக்டர் அம்பேத்கர் சர்வதேச மையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கர்மயோகி தேசிய கற்றல் வாரத்தை அவர் தொடங்கி வைத்துப் பேசினார்.

மத்திய அரசு ஊழியர்களின் பணிசார்ந்த நடைமுறைகளை மேம்படுத்தும் வகையில் இந்த இயக்கம் செயல்பட்டு வருவதாகக் கூறினார்.

கடந்த 10 ஆண்டுகளில் நாட்டின் மேம்பாட்டிற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை பிரதமர் எடுத்துரைத்தார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் இந்தியாவிற்கு வாய்ப்பாகவும், சவாலாகவும் உள்ளது என்று அவர் கூறினார்.

உலக அளவில் ஏற்பட்டு வரும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப அரசு ஊழியர்கள் தங்களைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

புதிய சிந்தனை, மக்களை மையமாகக் கொண்ட அணுகுமுறை ஆகியவற்றை பின்பற்றுவதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

40 லட்சத்திற்கும் மேற்பட்ட அரசு ஊழியர்கள் **IGOT** இணையதளத்தில் பதிவு செய்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

அரசு ஊழியர்களின் தனிப்பட்ட செயல்பாட்டிற்கும், நிறுவன திறன் மேம்பாட்டிற்கும் இதுபோன்ற பயிற்சிகள் புதிய உத்வேகத்தை அளிக்கும் என்று திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

<<<<>>>>

கடந்த 10 ஆண்டுகளில் நாடு அடைந்துள்ள முன்னேற்றம் உலக நாடுகளை உற்றுநோக்கச் செய்துள்ளதாக தமிழக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி தெரிவித்துள்ளார்.

தஞ்சையில் சாஸ்த்ரா நிகர்நிலைப் பல்கலைக்கழக வளாகத்தில் 60 கோடி ரூபாய் மதிப்பில் 2 லட்சத்து 25 ஆயிரம் சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ள ஆராய்ச்சி கூடத்தின் 3வது மற்றும் 4வது பிரிவை அவர் தொடங்கி வைத்தார்.

மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக உலகின் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா உருவெடுக்கும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

அனைவரையும் உள்ளடக்கிய சமத்துவ உலகைப் படைக்க வேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடாக உள்ளது என்று அவர் தெரிவித்தார்.

எந்தவொரு பிரச்சினைக்கும் போர் ஒரு தீர்வாகாது என்பதை இந்தியா உணர்ந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் வளர்ச்சியை கருத்தில் கொண்டு மாணவர்கள் செயலாற்ற வேண்டும் என்று திரு. ஆர்.என். ரவி வலியுறுத்தினார்.

<<<<>>>>

அரசின் திட்டங்கள் அனைத்தும் மக்களைச் சென்றடையும் வகையில் அதிகாரிகள் பணியாற்ற வேண்டும் என்று துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் வளர்ச்சித் திட்டப் பணிகளின் செயல்பாடுகளை அவர் ஆய்வு செய்தார்.

மக்களிடம் இருந்து பெறப்பட்ட மனுக்கள் மீது குறித்த காலத்தில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அதிகாரிகளுக்கு அவர் அறிவுறுத்தினார்.

<<<<>>>>

கிராமப்புற மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கான திட்டங்களை தமிழக அரசு செயல்படுத்தி வருவதாக மாநில சட்ட அமைச்சர் திரு. ரகுபதி தெரிவித்துள்ளார்.

புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதியில் உள்ளாட்சி அமைப்புகளின் கீழ் கட்டப்பட்டுள்ள புதிய கட்டிடங்களை திறந்து வைத்துப் பேசினார்.

அரசின் நலத்திட்டங்களை மக்கள் ஆக்கப்பூர்வமாக பயன்படுத்திக் கொண்டு வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்ள வேண்டுமென்று அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

விவசாயிகள் பயனடையும் வகையில் 2 லட்சம் மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக மாநில அமைச்சர் திரு. செந்தில் பாலாஜி தெரிவித்துள்ளார்.

கரூர் மாவட்டம் தான்தோன்றிமலைப் பகுதியில் அமைந்துள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற தனியார் வேலைவாய்ப்பு முகாமில் கலந்துகொண்ட அவர், தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், கரூர் மாவட்டத்தில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்று அத்திட்டத்திற்கு அனுமதி அளித்துள்ள முதலமைச்சருக்கு மாவட்ட மக்களின் சார்பில் நன்றி தெரிவித்துக்கொள்வதாக அமைச்சர் கூறினார்.

<<<<>>>>

கும்பகோணத்தில் அரசு போக்குவரத்துக்கழகத்தின் சார்பில் 6 முருகன் கோவில்களை ஒரேநாளில் தரிசிக்கும் வகையில் சிறப்பு சுற்றுலாப் பேருந்தை மாநில அமைச்சர்கள் திரு. சிவசங்கர் மற்றும் திரு. கோவி. செழியன் ஆகியோர் இணைந்து தொடங்கி வைத்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மாநில போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. சிவசங்கர், வார இறுதி நாட்களில் இந்த சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படும் என்று கூறினார்.

(வாய்ஸ் பைட் - சிவசங்கர் - 38 நொடிகள்)

முக்கிய திருவிழா நாட்களில் கூடுதல் பேருந்துகள் இயக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<>>>>

தேசிய மகளிர் ஆணைய தலைவராக திருமதி **Vijaya Rahatkar** நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கான அறிவிப்பை மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

மகாராஷ்டிர மாநிலத்தின் மகளிர் ஆணைய தலைவராகவும், அவுரங்காபாத் மேயராகவும் இவர் பணியாற்றியுள்ளது குறிப்பிடத்தக்கது.

தேசிய மகளிர் ஆணையத்தின் உறுப்பினராக டாக்டர் அர்ச்சனா மஜும்தார் நியமிக்கப்பட்டுள்ளதாக அந்த அமைச்சகத்தின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

வட தமிழக பகுதிகளில் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக தமிழகத்தின் பெரும்பாலான இடங்களில் அடுத்த 6 நாட்களுக்கு இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தருமபுரி, சேலம், கிருஷ்ணகிரி, ஈரோடு, திருப்பத்தூர் மற்றும் வேலூர் மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

கோயம்புத்தூர், திருப்பூர், திண்டுக்கல் மாவட்ட மலைப் பகுதிகள், நீலகிரி மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் நாளை கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.

சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளின் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

*<u>இருவரிச் செய்திகள்</u>*

ரஷ்யாவுடனான வர்த்தகம் மற்றும் முதலீட்டு வாய்ப்புகள் குறித்து தொழில்துறை நிறுவனங்களின் தலைவர்களுடன் அந்நாட்டுக்கான இந்திய தூதர் திரு. வினய்குமார் பேச்சு நடத்தினார்.

-----------

சூடானில் ஏற்பட்ட கனமழை மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக 10 லட்சத்துக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளதாக ஐ.நா. தெரிவித்துள்ளது.

-----------

ஜார்கண்ட் மாநில சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிடும் 66 வேட்பாளர்கள் கொண்ட முதல் பட்டியலை பிஜேபி நேற்று வெளியிட்டுள்ளது.

-----------

அசாமில் சைபர் குற்றங்களை தடுக்கும் வகையில் தேசிய சைபர் தடயவியல் ஆய்வகம் உருவாகப்பட உள்ளதாக அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.

-----------

சத்தீஸ்கட் மாநிலம் நாராயண்பூர் மாவட்டத்தில் நடந்த குண்டுவெடிப்பு சம்பவத்தில் பாதுகாப்புப் படையினர் 2 பேர் வீர மரணம் அடைந்தனர்.

-----------

சிறுபான்மையினர் மேம்பாட்டிற்காக மாநில அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களின் அமலாக்கம் குறித்து அத்துறைக்கான அமைச்சர் திரு. நாசர் ஆய்வு செய்தார்.

-----------

நாமக்கல் மாவட்டத்தில் செயல்படும் மறுவாழ்வு இல்லங்கள் ஒருமாத காலத்திற்குள் பதிவு செய்யப்படவில்லை எனில் அவற்றுக்கு சீல் வைக்கப்படும் என்று ஆட்சியர் திருமதி உமா தெரிவித்துள்ளார்.

-----------

திருப்பூர் மாவட்டம் பெருமாநல்லூரில் சாதனை நிகழ்ச்சிக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வள்ளிக்கும்மி ஆட்டத்தை பிஜேபி மூத்த தலைவர் திருமதி தமிழிசை சௌந்தரராஜன் தொடங்கி வைத்தார்.

-----------

திண்டிவனத்தை அடுத்த மயிலம் சுப்பிரமணிய ஸ்வாமி திருக்கோவிலில் ஐப்பசி மாத கார்த்திகையை ஒட்டி சிறப்பு பூஜைகள் மற்றும் அபிஷேகங்கள் நடைபெற்றன.

-----------

*விளையாட்டுச் செய்திகள்*

ஜோஹர் கோப்பை ஜூனியர் ஹாக்கிப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் இந்தியா - இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

மலேசியாவில் நடைபெறும் இப்போட்டி இந்திய நேரப்படி பிற்பகல் 1.35 மணிக்கு தொடங்குகிறது.

--------------

அல்மாட்டி ஓபன் டென்னிஸ் போட்டியில் ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் அர்ஜுன் கதே – ரித்விக் இணை கொலம்பியாவின் **Nicolas Barriento** – துனிஷியாவின் **Skander Monsouri** இணையை எதிர்கொள்கிறது.

கஜகஸ்தானில் நடைபெறும் இப்போட்டி இன்று பிற்பகல் 12.30 மணிக்கு தொடங்குகிறது.

---------------

உலகக்கோப்பை மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் நியூசிலாந்து இன்று தென்னாப்பிரிக்காவை எதிர்கொள்கிறது. துபாயில் நடைபெறும் இப்போட்டி, இந்திய நேரப்படி இரவு ஏழரை மணிக்கு தொடங்குகிறது.

--------------

தூத்துக்குடியில் நடைபெற்ற தேசிய அளவிலான கடல் சாகச விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாடு அணி ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தை வென்றது.

---------------

ரஞ்சிக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் தமிழக அணிக்கு எதிரான ஆட்டத்தின் இரண்டாம் நாளான நேற்று ஆட்டநேர இறுதியில் தில்லி அணி

முதல் இன்னிங்சில் விக்கெட் இழப்பின்றி 43 ரன் எடுத்தது.

தில்லியில் நடைபெற்று வரும் இப்போட்டியில் தமிழக அணி முதல் இன்னிங்சில் 6 விக்கெட் இழப்புக்கு 674 ரன் எடுத்திருந்த நிலையில் ஆட்டத்தை முடித்துக்கொள்வதாக அறிவித்தது.

--------------

ப்ரோ கபடி லீக் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் பெங்கால் அணி – ஜெய்ப்பூர் அணியையும், குஜராத் அணி – பெங்களூரு அணியையும் எதிர்கொள்கின்றன.

--------------

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் முகமதன் அணி – கேரளா அணியை எதிர்கொள்கிறது.

**<<<<The End>>>>**